செய்தி வெளியீடு எண்: 788 நாள்: 31.12.2012

# சாலை பாதுகாப்பு வாரம்

24வது சாலைபாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு மாநகர் போக்குவரத்துக்கழகத்தின் சார்பில் சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் சாலை விபத்துக்களை தடுப்பது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் 1.1.2013 முதல் 7.1.2013 வரை ஒரு வார காலத்திற்கு சென்னையில் நடைபெற உள்ளது.

அனைத்து பணிமனைகளிலும் பணிமாற்றம் நேரத்தில் சாலைபாதுகாப்பு உறுதிமொழி ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களால் எடுத்துக்கொள்ளப்படும்.சிறப்பாக பணிபுரிந்த ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களை பாராட்டி பரிசுகள் வழங்குவதோடு மற்ற தொழிலாளர்களும் சிறப்பாக பணியாற்றுவதற்கு ஊக்குவிக்கப்படும்.

மேலும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த பேனர்கள் பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிலையங்கள்,பேருந்து நிறுத்தங்கள் போன்ற இடங்களில் வைப்பதற்கும் அதேபோல் மேற்கூறிய இடங்களில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்புான துண்டு பிரசுரங்கள் வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

தொழிலாளர் நலன் கருதி பிரம்மகுமாரிகள் சங்கத்தின் மூலமாக தியானம் மற்றும் யோகா பயிற்சி வகுப்புகள் நடத்திடவும், டாக்டர் அகர்வால்கண் மருத்துமனை மூலம் கண் பரிசோதனை முகாம் நடத்திடவும் ஏற்பாடுக்ள் செய்யப்பட்டுள்ளது.

சாலைைபாதுகாப்பு விழப்புணர்வு தொடர்பான பல்வேறுவிபரங்கள் உள்ளடக்கிய குறுந்ததகடுகள் ( C.D) மூலம் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**